**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**STC. No. 61 /2022 PW .8**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : நாசர் | தந்தை/கணவர் பெயர்: முத்தலிபு | |
| ஊர் | : | தாலுகா | : |
| வயது | : | தொழில் | : சார்பு ஆய்வாளர் |
| ஜாதி | : | சமயம் | : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.06.2026

---

**(எதிரி ஆஜரில்லை. எதிரி சார்பில் BNSS பிரிவு 355ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**10.06.2026 முதல் விசாரணை:**

1. நான் தற்போது தொண்டி காவல் நிலையத்தில் காவல் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.கடந்த 16.09.2021ம் தேதி நான் புழுதிப்பட்டி காவல் நிலைய சார்பு ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்த போது மதுரை மீனாட்சி மருத்துவமனையில் இருந்து வந்த தகவலை பெற்று அங்கு சென்று சிகிச்சையில் இருந்த பழனியப்பன் மகன் நந்தகுமார் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பதிவு செய்து பின்னர் நிலையம் வந்து 19.00 மணிக்கு அதன் தன்மைகேற்ப இதச பிரிவு 279, 337 காவல் நிலைய குற்ற எண் 69/2021 வழக்கை பதிவு செய்தேன். ( **மேற்படி முதல் தகவல்அறிக்கை அ.த.சா.ஆ– 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

2. நான் 17.09.2021ம்தேதி விசாரணைக்கு எடுத்துக்கொண்டு காலை 07.00 மணிக்கு சம்பவ இடமான துவரங்குறிச்சி பொன்னமராவதி செல்லும் தார் சாலையில் முத்துமாரியம்மன் கோவில் வளைவு அருகே சென்று சாட்சிகள் பிரபு மற்றும் வெள்ளச்சாமி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். ( **மேற்படி பார்வை மகஜர் அ.த.சா.ஆ–5 மற்றும் மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ–6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).**

3. பின்னர் சாட்சிகள் நந்தகுமார், பொன்னையா, சின்னையா, வெள்ளைச்சாமி, பிரம்மன், வெள்ளையன், பிரபு, வெள்ளைச்சாமி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் எதிரியை 17.09.2021ம் தேதி 11.15 மணிக்கு புழுதிப்பட்டியில் வைத்து கைது செய்து தக்க தனிநபர் ஜாமீனில் பெற்று நிலைய பிணையில் விடுவித்தேன்.

4. வழக்கில் சம்மந்தப்பட்ட வாகனங்களான TN63BH8110 என்ற Hero இரு சக்கர வாகனத்தையும் , TN45N2772 என்றஅரசு பேருந்தையும் வேண்டுகோள் கடிதம் கொடுத்து மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்தி தணிக்கை செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் மாணிக்கம் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து வாகன ஆய்வு அறிக்கைகள் பெற்றேன். ( **TN63BH8110 என்ற Hero இரு சக்கர வாகனத்தின் ஆய்வு அறிக்கை அ.த.சா.ஆ–7 ஆகவும், TN45N2772 என்ற அரசு பேருந்தின் வாகன ஆய்வு அறிக்கை அ.த.சா.ஆ–8 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).**

5. வழக்கில் காயம்பட்ட நந்தகுமார் மற்றும் பொன்னையாவுக்கு சிகிச்சையளித்த மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனை மருத்துவர் பாண்டியராஜன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்றுகள் பெற்றேன். ( **நந்தகுமார் என்பவரது மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனை விபத்து பதிவேடு அ.த.சா.ஆ–9 ஆகவும், நந்தகுமாரின் காயச்சான்று அ.த.சா.ஆ–10 ஆகவும் மற்றும் பொன்னையா என்பவரது மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனை விபத்து பதிவேடு அ.த.சா.ஆ–11 ஆகவும், பொன்னையா காயச்சான்று அ.த.சா.ஆ–12 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**).

6. இவ்வழக்கின் காயப்பட்ட நபர்கள் முதலில் மணப்பாறையில் உள்ள சிந்துஜா மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்று பின்னர் மேல்சிகிச்சைக்கு மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். **(நந்தகுமார் என்பவரது மணப்பாறை சிந்துஜா மருத்துவமனை விபத்து பதிவேடு அ.த.சா.ஆ–13 ஆகவும், பொன்னையா என்பவரது மணப்பாறை சிந்துஜா மருத்துவமனை விபத்து பதிவேடு அ.த.சா.ஆ–14 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).**

7. இவ்வழக்கை சாட்சிகளின் வாக்குமூலத்தின் அடிப்படையிலும், காயப்பட்ட நந்தகுமாருக்கு வழங்கிய காயச்சான்றை பார்வையிட்டதிலும், அவருக்கு வலது கால், தொடையில் ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று கிடைக்கபெற்றதால் வழக்கின் சட்டப்பிரிவுகளை இதச 279,337 லிருந்து இதச 279, 338 ஆக மாறுதல் செய்து சட்டபிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். ( **அந்த சட்டபிரிவு மாறுதல் அறிக்கை அ.த.சா.ஆ–14 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்னர் வழக்கு விசாரணையை முடித்து மேற்சொன்ன பிரிவுகளின் படி எதிரி மீது குற்றஇறுதி அறிக்கை தயார் செய்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

8.எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. எனவே குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி அரசு மற்றும் குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பு வழக்குரைஞர்களுக்கு முன்பாக சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
சிங்கம்புணரி.